O.S. No: 170/2018

பெயர் : மோகனசுந்தரம்

**வா.சா. 1**

05-03-2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் ஏற்கனவே என்னுடைய குறுக்கு விசாரணையில் பிரதிவாதியுடைய கணவர் என்னென்ன கடன் வாங்கியிருக்கிறார் என்ற விவரம் என் மேனேஜரை கேட்டால் தான் தெரியும் என்று சொல்லியிருக்கேன் என்றால் ஆமாம் . அதற்கு பின்னர் லெட்ஜர் புத்தகங்களை தாக்கல் செய்ய சொல்லி பிரதிவாதி தரப்பில் அறிவிப்பு கொடுத்தார்கள் என்றால் ஆமாம் . அதற்கு நான் ஆட்சேபனை தெரிவித்துள்ளேன். மறுப்பு தெரிவிப்பதற்கான விவரங்களை யார் சொன்னார்கள் என்றால் கம்பெனியில் சொல்லியிருப்பார்கள் . பாலன் சீட்டு நிறுவனத்தை தான் நான் கம்பெனி என்று சொல்கிறேன். ஆட்சேபனையில் சொல்லியுள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம் . இந்த வழக்கு சம்மந்தமான ஆவணங்களை அனைத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் . இந்த வழக்கு சம்மந்தமாக கார்த்திகேயன் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு பற்றிய விவரம் தெரியும் . வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதா என்று ஞாபகமில்லை. பதில் அறிவிப்பு வழக்கில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஞாபகமில்லை. அதன் பின்னராவது பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்று என் வழக்கறிஞரை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். பதில் அறிவிப்பு அனுப்பியதாக தெரிந்து கொண்டேன் . என்னிடம் காட்டப்படும் ஆவணம் பதில் அறிவிப்பா என்றால் தெரியாது . நான் கார்த்திகேயனுக்கு பவர் ஏஜெண்டாக அவர் சொல்லும் சாட்சியத்திற்காக தான்

சட்சியமளிக்கிறேன். அவர் சொல்ல வேண்டிய சாட்சியத்தை தான் நான் சொல்கிறேன். நான் பவர் ஏஜெண்டு வைத்து நடத்திய வழக்குகளில் நான் சொல்ல வேண்டிய சாட்சியத்தை தான் எனக்காக என்னுடைய பவர் ஏஜெண்ட் சொல்லுவார். நான் அசல் வழக்கு எண் 143/2018 இல் நான் தாக்கல் செய்த வழக்கில் முருகானந்தம் என்பவரை பவர் ஏஜெண்டாக வைத்து வழக்கு நடத்தினேன் என்றால் ஆமாம். அதில் முருகானந்தம் கடனுக்கு கிரைய ஒப்பந்தம் தான் எழுதி வாங்கப்படும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல . கடன் தொகை செலுத்தப்பட்டுவிட்டால் கிரைய ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் என்று சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல . என் சகோதரர் நிறைய கிரைய ஒப்பந்தம் போட்டிருக்கிறாரா என்றால் இல்லை . நான் எத்தனை கிரைய ஒப்பந்தங்கள் செய்திருக்கிறேன் என்றால் பார்த்தால் தான் சொல்ல முடியும் . கிரைய ஒப்பந்தம் போடும் போது ஸ்டாம்ப் வாங்கி எழுதிவிட்டு தான் பதிவு செய்வோம் . வா.சா.ஆ.2 வரவு ரசீது என்று உள்ளது . இந்த விவரம் எனக்கு தெரியும் . இதில் முதல்ல 2 ஸ்டாம்ப் அடுத்தடுத்து வருகிறது, 3 வது ஸ்டாம்ப் வேறு எண்ணாக உள்ளது என்றால் சரி. எனக்கு, என் தம்பிக்கு எல்லாம் பத்திரம் எழுதுவது எழுத்தர் பசுபதி . இதில் ரமேஷ் என்று சாட்சி கையெழுத்து போட்டிருப்பது என் தம்பி . இதில் என் தம்பி கார்த்திகேயன் கையெழுத்து செய்யவில்லை என்றால் அவர் தான் வரவு என்பதால் அவர் கையெழுத்து போடவில்லை . வா.சா.ஆ.1 பத்திரத்தில் பசுபதி சாட்சியாக கையெழுத்து போட்டிருக்கிறார் என்றால் சரிதான் . இதில் சொத்தின் சுவாதீனம் இரண்டாவது நபர் வசம் இருந்து வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் ஆமாம் . கார்த்திகேயன் எம் .எஸ் கமால் பாட்சா என்பவரிடம் 09/06/2010 இல் ஒரு அடமான கடன் பத்திரம் எழுதி வாங்கியுள்ளார் என்றால்

ஆமாம். அவ்வாறு தான் எழுதப்பட்டுள்ளது . ஆனால் காண்பிக்கப்படும் ஆவணத்தில் கார்த்திகேயன் கையெழுத்து இல்லை. அந்த ஆவணம் பற்றி எனக்கு தெரியாது. 08/07/2014 இல் வரவு ரசீது கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது . கமால் பாட்சா 09/07/2014 இல் என்னுடன் ஒரு கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் ஆமாம் . அதில் சொத்துவிவரம் ஸ்ரீ நகர் காலனியில் உள்ளது . 25/02/2019 இல் என்னுடன் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்ட அந்த நபர் அதே சொத்தினை தன் மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் ஆமாம். கமால் பாட்சா மீது நான் கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்ற கோரி வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டேன் . எப்பொழுது ரத்து செய்தேன் என்று ஞாபகமில்லை . அதே சொத்தை பொறுத்த அவர் பையனுடன் நான் கிரைய ஒப்பந்தம் 20/08/2020 இல் கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தியுள்ளேன் என்றால் ஆமாம். அந்த கிரைய ஒப்பந்தத்தை 02/08/2024 இல் ரத்து செய்துவிட்டேன். அவர் கொடுத்த பணத்தை என்னிடம் கொடுத்துவிட்டதால் தான் நான் ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டேன் என்றால் சரியல்ல . அவர்கள் மீண்டும் கிரையமாக வாங்கிக்கொண்டார்கள் . என் தம்பி ரமேஷ்க்கும் ஜம்சாத் பேகத்திற்கும் இடையே 27/11/2009 இல் ஒரு கிரைய சாசன ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்றால் சரி. அது கும்பகோணம் ஸ்ரீநகர் காலனியில் உள்ள ஒரு வீடு சம்மந்தமாக ஏற்பட்டுள்ளது என்றால் ஆமாம் . அந்த கிரைய ஒப்பந்தத்தின் படி நான்எழுதி வாங்கினேனா என்றால் அவர்களே திரும்ப பணம் கொடுத்து குடும்பத்திற்குள் பிரச்சனை என்று எழுதி வாங்கிக்கொண்டார்கள் . கார்த்திகேயன் பிரதிவாதியின் கணவர் முகமது ஆரீப்பிடம் 15/07/2013 இல் சிதம்பரத்தில் உள்ள சொத்துக்களை எழுதி வாங்கியுள்ளார் என்றால் முழுத்தொகை கொடுத்து வாங்கியுள்ளார் . இந்த

கிரைய தொகை முழுவதும் நாங்கள் கொடுத்த கடனுக்காக முழுவதும் உளவடைக்கப்பட்டது என்றால் சரியல்ல . முகமது ரியாசுதீன் என்பவர் பிரதிவாதியின் மகன் . அவருக்கும் எனக்கும் கொடுக்கல் வாங்கல் இல்லை . அவருக்கும் என் குடும்பத்தாருக்கும் கொடுங்கல் வாங்கல் உள்ளதா என்று ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் ஆவணம் முகமது ரியாசுதீன் என்பவருடைய வங்கி கணக்கு நகல் . அதில் அவருடைய கணக்கை Authorised person என்று என் பெயர் உள்ளது என்றால் நான் கணக்கு ஆரம்பிப்பதற்கு தான் நான் அவரை அறிமுகம் வங்கியில் செய்து வைத்தேன் . அவருடைய வங்கி கணக்கில் நான் கூட்டு கணக்காளர் என்றால் சரியல்ல . காண்பிக்கப்படும் ரசீதுகள் என் நிறுவனத்தால் கொடுக்கப்பட்டது தானா என்றால் ஆமாம் . அந்த ரசீதுகள்(எண்ணிக்கை-14) **பி.சா.ஆ.1 வரிசை ஆகும் .** வா.சா.அ.1 தேதியான 04/11/2011 ற்கு பிறகு இந்த ரசீதுகள் போடப்பட்டுள்ளது என்றால் இந்த ரசீதுகள் பாலன் சிட் பண்ட் சம்மந்தப்பட்டது . வாதிக்கும் இதுக்கும் சம்மந்தம் இல்லை . இந்த ரசீதுகளை பொறுத்து என்னால் அடி கட்டையை பார்த்தால் தான் என்னால் அதன் உண்மை தன்மையை சொல்ல முடியும். என்னிடம் காட்டப்படும் பாலன் சிட் பண்ட் கணக்குகளை பொறுத்த விவரங்களை என்னால் அசல் ஆவணங்களை பார்க்காமல் சொல்ல முடியாது . பொதுவாக ஒரு சொத்தை விற்பவர்கள் பண தேவைக்காக விற்பார்கள் என்றால் ஆமாம் . சொத்தை வாங்குபவர்களும் அதை உடனே வாங்கவேண்டும் என்ற ஆர்வத்தில் வாங்குவார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கில் கால நிர்ணயம் முதலில் 2 வருசம், அப்புறம் 5 வருடங்கள். மொத்தத்தில் 2018 வரை கால நீட்டிப்பு. அவர்கள் குடும்பத்திற்குள் குடும்ப பிரச்சனை இருந்ததால் கால அவகாசம் கேட்டார்கள் . வா.சா.ஆ.2 அவ்வாறு கண்டு எழுதப்பட்டுள்ளதா

என்றால் இல்லை . வாய் மொழியாக பேசப்பட்டது . வக்கீல் அறிவிப்பில் மேற்சொன்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்களுக்கும் பிரதிவாதியின் கணவருக்கும் இடையே வரவு செலவு தொடர்ந்து இருந்து வருவதால் தான் இந்த பத்திரத்தை கால அவகாசம் இவ்வளவு காலம் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 04/11/2011 இல் பிரதிவாதிக்கு வாதி ரூபாய் 5 லட்சம் கொடுத்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. இந்த பணம் கொடுத்த விவரத்தை வருமானவரி கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளதா என்றால் வாதி காண்பித்திருப்பார். அது வாதிக்கு தான் தெரியும் . எங்கள் நிறுவனத்தில் பிரதிவாதியின் கணவர் பல வருடங்களாக பணம் கொடுத்து வாங்கி வருகிறார் என்றால் ஆமாம். மேற்கொண்டு பணம் கொடுக்க வேண்டும் என்றால் பிரதிவாதி பெயரில் பிரதிவாதியும் அவரது கணவரும் ஒரு பதிவு ஆவணம் செய்து கொடுக்க வேண்டும் என்று நானும் என் தம்பியும் பிரதிவாதியையும் அவரது கணவரையும் கட்டாயப் படுத்தினோம் என்றால் சரியல்ல. அதனால் தான் ஆவணம் தயார் செய்து. பிரதிவாதியிடமும் அவரது கணவரிடமும் அதிலுள்ள விவரங்கள் அவர்களுக்கு தெரியாமலேயே கையெழுத்து வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல. 05/09/2013 லும், பிரதிவாதியிடமும் அவரது கணவரிடமும் அதிலுள்ள விவரங்கள் கூறாமல் அதில் கையெழுத்து மட்டும் வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல . 05/09/2013 இல் பிரதிவாதிக்கு ரூபாய் 1 லட்சம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த 1 லட்சம் கொடுத்ததை வருமானவரி கணக்கில் வாதி காண்பித்திருப்பார் . இந்த விவரங்கள் அறிவிப்பு அனுப்பிய பிறகு தான் பிரதிவாதிக்கே தெரியவந்தது என்றால் சரியல்ல . பிரதிவாதிக்கும் என் சகோதரருக்கும் இடையே எந்த காலத்திலும் கிரைய ஒப்பந்தம் ஏற்படவில்லை, நீட்டிக்கப்படவில்லை என்றால் சரியல்ல . நான் பிரதிவாதியின்

கணவருக்கு கொடுத்த கடனுக்காக பிரதிவாதியின் கணவரிடம் பல வெற்று பத்திரம் மற்றும் ப்ரோ நோட்டுக்கள் , காசோலைகளில் கையெழுத்து வாங்கி வைத்திருக்கிறேன் என்றால் சரியல்ல . அவற்றை பயன்படுத்தி வேறு நபர்கள் மூலமாக வேறு நீதிமன்றங்களில் பிரதிவாதியின் கணவர் மீது வழக்குகள் தாக்கல் செய்திருக்கிறேன் என்றல் சரியல்ல . நான் இந்த வழக்கை பொய்யாக பிரதிவாதியின் மீது தாக்கல்செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல . நான் வழக்கில் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல . வழக்கிற்கான வழக்குமூலம் பொய்யானது என்றால் சரியல்ல . எந்தகாலத்திலும் நான் கிரையம் செய்து கொடுக்க சொல்லி பிரதிவாதியிடம் கேட்கவில்லை என்றாலும் கேட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.